## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி

## வழக்கு எண். C.C. No. 322/ 2018

2022 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 13 ம் தேதி புதன் கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 2 வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி. தவமணி Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கவர்னர் பாஷா | தொழில் | : ரைஸ் மில் வேலை |
| தந்தை பெயர் | சையது ரமுதுல்லா | சமயம் | : |
| கிராமம் | : நீலம்பூண்டி, மாவனந்தல் | சாதி | : |
| வட்டம் | : மேல்மலையனூர் | வயது | : 46 |

தேதி 13.07.2022:

சாட்சியையும் எதிரிகளையும் வளத்தி காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு. மணிகண்டன் Gr.1- 741 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**அ.சா. 2 கவர்னர் பாஷா : முதல் விசாரணை**

நான் மாவனந்தல் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் ரைஸ் மில்லில் கூலிக்கு வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். ஆஜர் 1ம் எதிரி என் உடன் பிறந்த அண்ணன். ஆஜர் 2ம் எதிரி எனது அண்ணனின் 2 வது மனைவி. அ.சா1 எனது மனைவி. கடந்த 01.11.2017 ம் தேதி காலை 9.00 மணி அளவில் எனது வீட்டிற்கு உள்ளே ரைஸ்மில்லில் மில் ஓட்டிக்கொண்டியிருந்தேன். நான் வேலை செய்து கொண்டியிருந்தபோது சத்தத்தில் எதுவும் கேட்டக்வில்லை,. ஊர்க்காரர்கள் சொன்தின் பேரில் மாடியில் உள்ள எனது வீட்டிற்கு சென்று பார்த்தபோது ஆஜர் எதிரிகள் என் மனைவியை அடித்து கீழே தள்ளிவிட்டு சென்றுவிட்டார்கள். நான் சென்று பார்த்தபோது என் மனைவி சுயநினைவு இல்லாமல் இருந்தார். ஊர்க்காரர்கள் பார்த்து பின்னர், நானும், அவர்களும் சேர்ந்து என் மனைவியை பாண்டிச்சேரி மருத்துவமனைக்கு அழைத்து கொண்டு சேர்த்தோம். 3 நாட்கள் பிறகுதான் என் மனைவிக்கு சுய நினைவு வந்தது. போலிசார்கள் ஊரில் வந்து விசாரித்தார்கள். போலிசார் என்னையும் விசாரித்தார்கள்.

**அ.சா. 2 கவர்னர் பாஷா :எதிரிதரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கும், எனது அண்ணன் ஆஜர் 1ம் எதிரிக்கும் சொத்து சம்மந்தமாக பிரச்சனை உள்ளது என்றால் சொத்து சம்மந்தமாக பிரச்சனை இல்லை. எனக்கும், ஆஜர்

எதிரிகளுக்கும் என்ன பிரச்சணை என்றால் எனக்கு எதுவும் பிரச்சணை இல்லை . என் மனைவியை அவர் அடித்துவிட்டார். முதல்தளத்தில் உள்ள 2 வீடுகளில் முதல் வீடு ஆஜர் எதிரி வீடு உள்ளது என்றாலும், அதற்கு அடுத்ததாக எனது வீடு உள்ளது என்றால் சரிதான். என் வீட்டிற்கும் தரை தளத்தில் உளள ரைஸ்மில்லுக்கு காலையில் நான் சென்றுவிடுவேன் என்றால் சரிதான். ரைஸ் மில் சத்தத்தில் முதல் மாடியில் என்ன நடக்கிறது என்பது எனக்கு தெரியாது என்றால் சத்தத்தில் கேட்காது. எனக்கு டீ தேவைப்பட்டால் என் மனைவி அடிக்கடி இறங்கிவந்து டீ கொடுப்பார் என்றால்இல்லை. அடிக்கடி கீழே வரமாட்டார். எப்போதாவது வருவார். அவ்வாறு என் மனைவி கீழே வரும்போதோ ஆஜர் எதிரிகள் அவர்கள் வீட்டில் இருப்பார்கள் என்றால் சரிதான். என் மனைவி மாடியில் இருந்து தன் வீட்டில் இருந்து கீழே வரும்போது ஆஜர் எதிரிகளை பார்த்து தகாத வார்த்தைகளால் என் மனைவி பேசி வருவதாக ஆஜர் எதிரிகள் என்னிடம் சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. என் மனைவி தகாத வார்த்தைகளால் எனது அண்ணனை பார்த்து பேசுவதை கண்டித்து வைக்குமாறு ஆஜர் 1ம் எதிரி என்னிடம் கூறியும் நான் என் மனைவியை கண்டித்து வைக்கவில்லை என்றால் என் மனைவி தகாத வார்த்தைகளால் பேசியதாக எனது அண்ணன் ஆஜர் 1ம் எதிரி என்னிடம் கூறியது இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் தரை தளத்தில் உள்ள ரைஸ்மில்லில் இருந்தேன் என்றால் ஆமாம். ஊர்க்காரர்கள் சொன்னதின்பேரில்தான் எனக்கு தெரியும் என்றால் ஊர்க்காரர்கள் சொன்ன பிறகுதான் மேலே சென்று நான் பார்த்தேன். ஊர்க்காரர்கள் சொல்வதற்கு முன்பாக தெரியாது என்றால் தெரியாது. ரைஸ்மில் சுற்றி சுற்று சுவர் உள்ளது என்றால் உள்ளது. எதிரில் உள்ள கடையில் யாரும் இல்லை என்றால் இல்லை. ரோட்டில் இருந்த ஆட்கள்தான் வந்து சொன்னார்கள். யார் என்னிடம் சொன்னார்கள் அவர் பெயர் என்ன என்றால் முருகன் ஆச்சாரி சொன்னார். முருகன் ஆச்சாரியை சாட்சியாக சேர்த்து இருக்கிறார்களா என்றால் இல்லை. அவர் கூடமாட வந்து மருத்துவமணைக்கு வந்து உதவி செய்தார். என் மனைவி தண்ணீர் எடுத்து கொண்டு மாடிக்கு செல்லும்போது தவறி கீழே விழுந்தபோது ரோட்டில் சென்றவர் ஓடிவந்த சொன்னபிறகுதான் எனக்கு தெரியும் என்றால் என்ம னைவி மாடிக்கு தண்ணீர் எடுத்து செல்ல மாட்டார். நான்தான் மாடிக்கு தண்ணீர் குடம் எடுத்து செல்வேன். என் மனைவி தண்ணீர் குடம் எடுத்து செல்லும்போது தவறி விழுந்து

காயம் எற்பட்டது என்றால் இல்லை. தண்ணீர் குடத்தை என் மனைவி எடுத்துச்சென்றபோது படியில் ஏறும்போது தவறி விழுந்ததனால் காயம் ஏற்பட்டது என்றால் தவறு,. எதிரிகள் அடித்ததனால்தான் என் மனைவிக்கு காயம் ஏற்பட்டது. எத்தனை மணிக்கு மருத்துவமணையில் சேர்த்தோம் என்றால் காலை 9.00 மணிக்கு ஜிப்மர் மருத்துவமணையில்சேர்த்தோம். பாண்டிச்சேரி மருத்துவமணையில் போலிசார் விசாரரணை செய்து வாக்குமூலம் பெற்றாரா என்றால் இல்லை. செஞ்சியில் அரசு மருத்துவமணையில் வைத்து வாக்குமூலம் வாங்கினாகள். என் மனைவி 3 நாட்களுக்கு சுய நினைவு இல்லாமல் இருந்தார் என்றால் ஆமாம். 3 நாட்கள் கழித்துதான் வாக்குமூலம் போலிசார் வாங்கினார்களா என்றால் நாங்கள் மருத்துவமணை சென்ற பிறகு ஊரில் வந்து விசாரித்தார்கள். செஞ்சி மரு்த்துவமணையிலும் வந்து விசாரித்தார்கள். பாண்டிச்சேரி மருத்துவமணையில் விசாரிக்கவில்லை. ரைஸ்மில் இதுநாள் வரை நான்தான் ஓட்டிவருகிறேன் என்றால் எனது அம்மா பெயரில் ரைஸ்மில் உள்ளது. அவர் என்னை ஓட்டச்சொன்னார். நான் 6 மாதமும், அண்ணன் 6 மாதமும், மற்றொரு அண்ணன் 6 மாதமும் என ரைஸ்மில் ஓட்ட ஒப்புகொண்டோம் என்றால் சரிதான். என்னுடைய 6 மாதம் முடிந்த நிலையில் ஆஜர் எதிரி என்னிடம் வந்து ரைஸ்மில் என்னிடம் விடுமாறு கேட்டாரா என்றால் கேட்டார். ஆனால் எனது அம்மா ரைஸ்மில்லை என்னை ஓட்டுமாறு கூறினார். அவ்வாறு என்னிடம் ரைஸ்மில் கொடுக்மாறு கேட்டபோது என் தாயார், என் மனைவி ஆகியோர்கள் இருந்தபோது என் மனைவி ரைஸ் மில்லை விட்டுக்கொடுக்க கூடாது என்று ஆஜர் எதிரிகளிடம் தகாத வார்த்தைகளால் பேசினார் என்றால் என் மனைவி எதுவும் பேசவில்லை. வளத்தி' காவல் நிலையத்தில் ஆஜர் எதிரிகளுக்கு எதிராக அடிக்கடி என் மனைவி புகார்கொடுத்திருக்கிறார் என்றால் புகார் கொடுத்திருக்கிறார். எதிரிகளை பழிவாங்குவதற்கு படியில் இருந்து கீழே விழுந்ததை வைத்து எதிரிக்கு எதிராக புகார் கொடுத்ததாக ஆஜர் எதிரிகள் கூறுகிறார்கள் என்றால் சரியல்ல. அடிக்கடி காவல் நிலையத்தில் என் மனைவி புகார் கொடுத்ததனால் போலிசார்கள் வந்து மாடியில் என் குடும்பம் மட்டும் இருக்கவேண்டும் என்றும் ஆஜர் எதிரி குடும்பத்தை வேறு இடத்திற்கு செல்மாறு கூறிவிட்டார்கள். வழக்கில் ஊர்க்காரர் முன்னிலையில் சமாதானம் பேசினோமா என்றால் இல்லை. நான் என் மனைவி கொடுத்த புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் பொய் சாட்சி

சொல்லவில்லை. செஞ்சி மருத்துவமனையில் போலிசார் விசாரித்தபிறகு மீண்டும் விசாரித்தார்களா என்றால் செஞ்சி மருத்துவமனையில் வைத்துதான் விசாரித்தார்கள் அதன் பிறகு விசாரிக்கவில்லை. ஆஜர் எதிரியின் பாகத்தை எனக்கு எழுதி கொடுக்காததால் மனைவியை தூண்டி விட்டு பொய் புகார் கொடுத்து சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. போலிஸ் விசாரணையில் சொன்னதைதான் நீதிமன்ற விசாரணையிலும் சொல்கிறேனா என்றால் ஆமாம்.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை** :

இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளள்ப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.